**Publication:** Dinamani
**Date:** 26/08/2015
**Page no.:** 02
**Headline:**St. Jude’s PublicSchool wins TCS IT Wiz quiz

# விநாடி-வினா போட்டி: செயின்ட் ஜூட்ஸ் பள்ளி முதலிடம்

**கோவை, ஆக. 25:** டி.சி.எஸ். தகவல் தொழில்நுட்ப நிறுவனம் சார்பில் நடைபெற்ற விநாடி-வினா போட்டியில், கோத்தகிரி ஜூட்ஸ் பப்ளிக் பள்ளி மாணவர்கள் முதலிடம் பெற்றுள்ளனர்.

டி.சி.எஸ். தகவல் தொழில்நுட்ப சேவை நிறுவனம் சார்பில் பள்ளி மாணவர்களுக்கான விநாடி-வினா போட்டி கோவை ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி கலையரங்கத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இப்போட்டியில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 71 பள்ளிகளைச் சேர்ந்த 406 பேர் பங்கேற்றனர். இதில், இறுதிச் சுற்றுக்கு விளாங்குறிச்சி வித்யநிகேதன் மெட்ரிக் பள்ளி, காளப்பட்டி சுகுணா பப்ளிக் பள்ளி, பி.என்.பாளையம் ஜி.கே.டி.மேல்நிலைப்பள்ளி, புலியகுளம் வித்ய நிகேதன் பள்ளி, நல்லாம்பாளையம் அமிர்தா வித்யாலயம், கோத்தகிரி செயின்ட் ஜூட்ஸ் பள்ளிகள் தகுதி பெற்றன.

இதில், கோத்தகிரி செயின்ட் ஜூட்ஸ் பள்ளி மாணவர்கள் ஜே.கே.பய்ஷன், கே.சுதர்ஷனா ஆகியோர் 70 புள்ளிகள் பெற்று முதலிடமும், ஜி.கே.டி.பள்ளி மாணவர்கள் சரத் சந்தர், ஹரிகிருஷ்ணா ஆகியோர் 60 புள்ளிகள் பெற்று இரண்டாமிடமும், அமிர்தா வித்யாலயா பள்ளி மாணவர்கள் அஜய், வெங்கட் சுப்பிரமணியன் ஆகியோர் 40 புள்ளிகள் பெற்று மூன்றாமிடமும் பிடித்தனர்.